**SOP.NO: 02/2024**

**PW1 : லோகேஷ்வரன் த/பெ.அன்பழகன்**

நாள் : 24.02.2026

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>1, 2எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

சத்துவாச்சாரி ரங்காபுரத்தில் நான் கடந்த 4 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். அதற்கு முன்பு நான் சென்னை விடுதியில் தங்கியிருந்தேன். தற்போது வேலூரில் எனது அம்மாவினுடைய தங்கையுடைய பாதுக்காப்பில் வசித்து வருகிறேன்.

எனது தாயார் இறந்த பிறகு முதல் எதிர்மனுதாரரை எனது தந்தை 2வதாக திருமணம் செய்து கொண்டார். 2ம் எதிர்மனுதாரர் எனது தந்தைக்கும் முதல் எதிர்மனுதாரருக்கும் பிறந்த மகன் என்று சொன்னால் சரிதான்.

எனது தாயாருடைய ஓய்வு ஊதியத்தை ஒரு ஆண்டுக்கு முன்பு வரை நான் பெற்று வந்தேன். தற்போது 2ம் மனுதாரருக்காக நான் விண்ணப்பித்துள்ளேன். 2ம் மனுதாரருக்கு தற்போதைய வயது 23.

என்னுடைய தந்தை இறப்பதற்கு முன்பு வரை நாங்கள் அரக்கோணத்தில் வாடகை வீடான Phase-5, ஜோதி நகரில் வசித்து வந்தோம். முதல் எதிர்மனுதாரர் எங்களை விட்டுவிட்டு அவரது தாய் வீடான திருத்தணிக்கு சென்று விட்டார்.

இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது முதல் எதிர்மனுதாரர் நிரந்தரமாக மின்னல் கிராமத்தில் வசிப்பதாக தான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். தற்காலிமாக முதல் எதிர்மனுதாரர் திருத்திணியில் வசிப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

முதல் எதிர்மனுதாரர் எனது தாயாரின் இறப்புக்கு பிறகு அவரது நகைகளை எடுத்துச் செல்லவில்லை என்றும் முதல் எதிர்மனுதாரரின் நகைகளை மட்டுமே எடுத்துச் சென்றதாக அவருடைய எதிருரையில் கூறியுள்ளார் என்று சொன்னால் அது தவறு.

எனது தாயார் 2003ம் ஆண்டு இறந்தார். முதல் எதிர்மனுதாரரை எனது தந்தை ஜுன் அல்லது ஜுலை மாதம் 2004ம் ஆண்டு திருமணம் செய்தார். என்ன என்ன நகைகளை முதல் எதிர்மனுதாரர் எடுத்துச் சென்றார் என்ற விவரத்தை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

உண்மையாகவே முதல் எதிர்மனுதாரர் எனது தாயாரின் நகைகளை எடுத்துச் சென்றிருந்தார் அவைகளை பற்றிய விவரத்தை மனுவில் கூறியிருப்பேன் என்றும் அவ்வாறு எடுத்துச் செல்லாததால் தான் அவைகளை பற்றி கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

முதல் எதிர்மனுதாரர் அவரின் திருமணத்தின் போது போட்ட 8 சவரன் நகைகளை மட்டும் தான் அவர் போகும் போது எடுத்துச் சென்றார் என்று சொன்னால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரரை எனது தந்தை இறந்த பிறகு

நாங்களும் எங்கள் உறவினர்களும் சேர்ந்து விரட்டி விட்டதால் தான் அவர் வேறு வழியின்றி அரக்கோணத்தில் வாடகை வீட்டில் வசித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

தற்போது முதல் எதிர்மனுதாரர் எங்கு வசித்து வருகிறார் என்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 7வது பத்தியில் குறிப்பிட்டுள்ள ஜலபதி என்ற நபர் கல்வி துறையில் ஒரு அதிகாரியாக பணியாற்றி வந்தார் என்று சொன்னால் சரிதான்.

எனது தந்தைக்கும் ஜலபதிக்கும் நல்ல பழக்கம் இருந்து வந்தது என்று சொன்னால் சரிதான். எனது தந்தை உயிருடன் இருந்த போது அவர் பெயரில் எடுத்திருந்த LIC Bond யை வைத்து ஜலபதியிடம் கடன் வாங்கி இருந்தார் என்று சொன்னால் சரியல்ல.

அந்த LIC Bondல் முதல் எதிர்மனுதாரரான ஆஷாவை தான் Nominee ஆக குறிப்பிட்டிருந்தார் என்றால் ஆமாம். முதல் எதிர்மனுதாரர் எனது தந்தையுடைய மருத்துவ செலவுக்காக ஜலபதியிடம் கடன் பெற்ற விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் கடன் வாங்கவில்லை.

கடன் வாங்கவில்லை என்று எனது அறியாமையின் காரணமாக கூறுகிறேன் என்றும் கடன் பெற்றார் என்பது தான் உண்மை என்று சொன்னால் சரியல்ல. LIC Bondல் முதல் எதிர்மனுதாரரை Nominee ஆக கூறியதன் அடிப்படையில் தான் அவரிடம் LIC நிறுவனம் பணம் ஒப்படைத்தது என்றால் அது தவறு. எனது தாயாரின் பெயரை தான் எனது தந்தை LIC Bondல் Nominee ஆக முதலில் கொடுத்திருந்தார். அவரது இறப்புக்கு பிறகு எனது தந்தை முதல் எதிர்மனுதாரர் பெயரை Nominee ஆக சேர்த்தார்.

முதல் எதிர்மனுதாரருடைய அசையும் அசையா சொத்துக்கள் பற்றிய விவரத்தை நான் மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். எனது தந்தையுடைய அசையும் அசையா சொத்துக்கள் முதல் எதிர்மனுதாரர் வசம் தனிப்பட்ட முறையில் இல்லை என்றால் சரியல்ல நகைகள் உள்ளது.

மின்னல் கிராமத்திலுள்ள வீடு முதல் எதிர்மனுதாரர் பெயரில் இல்லை என்றால் சரிதான் பொதுவில் தான் உள்ளது. அது என்னுடைய தந்தை பெயரில் உள்ளது.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.24 19:27:00 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.